www.padippakam.com

# அகதியான போது .................



------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**
**பாகம் 9**

கடைசியில் இலங்கையின் தேசிய பத்திரிகை ஒன்றில் கிடைத்தது வேலை.கை கட்டப்பட்ட நிலையில் நினைக்கும்,வெளிப்படுத்தும் உணர்வுகளை வெளியிட முடியாத நிலை.பத்திரிக்கையின் கொள்கைக்கு எந்த வகையிலும் முரண் பட முடியாத நிலை.இருந்தும் பல தடவைகளில் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டேன். குறுகிய காலத்தில் உலகச்செய்தி பொறுப்பு ஆசிரியனாக பதவி உயர்த்தப்பட்டேன்.இருந்தும் இரு நாட்கள் தொடர்ந்து ஈராக் பிரச்சினையை தலைப்பு செய்தியாக எழுதினால் தலைமை செய்தி ஆசிரியரிடம் 'இவர் முஸ்லீம் அதுதான் ஈராக் பிரச்சினையை தலைப்பாக தொடர்ந்து எழுதுகிறார்' என்று போட்டுகொடுக்கப்படும் அவர் அழைத்து விசாரிப்பார்

'தம்பி நீ முஸ்லீம்... ஈராக் பிரச்சினையை தலைப்பு செய்தியாக தொடர்ந்து போடுவதாக இங்குள்ளவர்கள் கூறுகிறார்களே ..தம்பி பார்த்து நடந்து கொள்ளு ' என்று நல்ல மனம் படைத்த அந்த மனிதர் எனக்கு சொல்லும் அறிவுரை.

முஸ்லீம் செய்திகள் பேனாக்களின் வெட்டல்களுக்கு ஆளாகிய பின்னரே பிரசுரமாகும்.யாழ்ப்பாண முஸ்லீம்களின் பிரச்சினை பல தடவைகளில் என்னால் எழுதப்பட்ட போதும் அதன் கருத்துகள் வெளிவரும் போது மாற்றப்பட்டு வரும். தொடர்ந்த போராட்டத்தின் பின்னர் வெள்ளிகிழமை இரண்டாம் பக்கத்தையும் இன்னொரு சஞ்சிகையின் ஒரு பூரண பக்கத்தையும் முஸ்லீம் பக்கமாக ஒதுக்க

www.padippakam.com

முடிந்தது.நமது முன்னணி மார்க்க அறிஞர்களுக்கு இது சம்பந்தமாக விளக்கி கடிதம் அனுப்பி அவர்களது ஆக்கங்களை அனுப்புமாறு பலதடவை கேட்டபோதும் ஒரு சிலரைத்தவிர அநேகரிடமிருந்து எந்த பதிலும் வராததும் மேற்குறிப்பிட்ட பக்க ஒதுக்கங்கள் காலப்போக்கில் பறிபோனதும் கவலைக்குரிய விடயங்கள் .

அன்று ஒருநாள் ... வழமையான பத்திரிகை அலுவலக வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்த வேளை,முஸ்லீம் காங்கிரசின் மூத்த துணைத்தலைவர் பத்திரிகை ஆசிரியர் பீடத்துக்கு திடீர் விஜயம் செய்தார் .தலைமை ஆசிரியர்ருடன் என்னவோ பேசிக்கொண்டு எனது மேசைக்கு அருகில் வந்த அவர் ,

தம்பி உங்கட ரெத்த சொந்தம்.என்னை தெரிகிறதா' என்றார்

'தெரியவில்லை 'என்று தூரதிஷ்ட வசமாக கூற வைத்தது கடந்த காலங்கள் கற்பித்த கசப்பான சம்பவங்கள்.மூத்தோருக்கு மரியாதை கொடுக்க எனது பெற்றோர் கற்பித்து தந்த போதும் ,என்னை விட மூத்தவர்களை கண்டால் எழுந்திருக்கும் பழக்கம் அப்போது எனக்கு இருந்த போதும் அப்போது என்னால் எழுந்து நிற்க முடியவில்லை.கடந்த காலங்களில் கிடைத்த அடிகள் என்னை இழுத்து இருக்க வைத்தது.

'உங்கட இரத்த சொந்தம் நான் ' என்று உறவு முறைகளை ஆசிரியர் பீடத்தில் நின்று விளக்கிகொண்டிருந்தார்.

இரத்த சொந்தம் என்பது இறக்கும் தருவாயில் இரத்தம் கொடுக்க தயாராக இருப்பதுதான் .இறக்க விட்டுவிட்டு கபுருக்கு மண் போடவருவதில்லை.எனக்கு அருகில் வந்து முஸ்லீம் காங்கிரசின் செய்திகளை அந்த பத்திரிகை நிறுவனம் அடிக்கடி பிரசுரிக்க தவறுவதால் எனது பெயருக்கு இனி செய்திகளை அனுப்புகிறேன் என்று கூறிய அவர் அவற்றை முன் பக்கத்தில் முக்கியம் கொடுத்து பிரசுரிக்குமாறு அன்பாக ,அடக்கமாக கேட்டுக்கொண்டார்.

சோழியன் குடும்பி ஏன் சும்மா ஆடுகிறது என்பதையும்,அரசியல் வாதி அரசியல் வாதிதான் என்பதையும் அப்போது தெரிந்துகொண்டேன் .

அதன் பின்னர் தினசரி எனக்கு தொலைபேசி எடுத்து சுகம் விசாரிப்பார்.மறந்து போன

படிப்பகம்

www.padippakam.com

உறவுகளை புதுப்பிக்கும் முகமாக எனது குடும்பம் பற்றி விசாரிப்பார்.சலாம் சொல்லச்சொல்லுவார் .அதற்கும் மேலாக ஒவ்வொரு நாளும் தலைவர் புகழ் பாடும் செய்திகளை 'பாக்ஸ்'(FAX )அடிக்கவும் அடித்தபின் தொலைபேசி எடுத்து நினைவு படுத்தவும் மறக்கவில்லை .அவர் அனுப்பிய சில செய்திகள் செய்திகளாக இல்லாமல் தலையின் புகழ் பாடும் கிறுக்கல்களாக இருந்ததால் நானும் பலவற்றை குப்பைகூடைகளில் போடவேண்டியிருந்தது.அன்புடன் ஏன் அச்சாகவில்லை என்று விசாரிப்பார்.கடைசியில், 'எடுப்பார் கைப்பிள்ளை' நான் இல்லை என்று தெரிந்த போது விலகிக்கொண்டார்.அரசியல் வாதிகளும்,அவர்களுக்கு பின்னால் பந்தம் பிடிக்கும் பரதேசிகளும் எப்படி இருப்பார்கள் என்றும் இப்படித்தான் இருப்பார்கள் என்பதையும் எழுத்துகளில் மாத்திரமல்ல நேராகவும் அங்கு பல தடவை கண்டுகொண்டேன் .

அகதியாக இருந்துகொண்டு அந்த பத்திரிக்கை நிறுவனத்தில் வேலை செய்தபோது சந்தித்த பல நிகழ்ச்சிகள் இன்னமும் ஞாபகம் இருக்கின்றது

(தொடரும் )

படிப்பகம்